DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | | |
|---|---|---|
| Calendar | | --- |
| Miscellaneous | | --- |
| Preliminary Register | : | **CC 273/2024** |
| Deposition of Witness for | : | PW 9 |
| Name | : | வேளாங்கண்ணி உதயரேகா |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |
| Date | : | 16.04.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 16th April 2026.

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது திருநெல்வேலி OCUCBCID பிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். சங்கரன்கோவில் தாலுகா காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்த போது நிலைய குற்ற எண்.71/2018 ச/பி. 454, 380 இதச என்ற வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன். இந்த வழக்கில் எனக்கு முன்பு விசாரணை செய்த விசாரணை அதிகாரி ஜோசப் செட்சன் 18.04.2018 ம் தேதி இந்த வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று சாட்சிகள் பிரவீன்குமார், காட்டுராஜ் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு **பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். மேற்படி பார்வை மகஜர் அ.சா.ஆ.9 ஆகவும், மாதிரிவரைபடம் அ.சா.ஆ.10 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் சாட்சிகள் பாலமுருகன், அரவிந்தன், டேனியல், மாரியம்மாள் பத்திரகாளி, பிரவீன் குமார், காட்டுராஜா மற்றும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த உதவி ஆய்வாளர் முத்துலட்சுமி அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்.

19.05.2018ம் தேதி 11.00 மணிக்கு எதிரிகள் கொடுங்குசாமி, மூர்த்தி என்ற மாரிச்சாமி, செல்வகுமார், சுரேஷ் கார்த்திகேயன் ஆகியோர்களை தெற்கு பனவடலி ஊருக்கு மேற்கே கொடுங்குசாமியின் தென்னந்தோப்பில் வைத்து சாட்சிகள் மதன்சிபாகர், சங்கரநாராயணன் ஆகியோர் முன்னிலையில் கைது செய்து விசாரித்தார். எதிரிகள் ஒவ்வொருவரும் தனித்தனியாக ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்துள்ளார்கள். 11.30 மணிக்கு எதிரி கொடுங்குசாமி ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் 17.04.2018ம் தேதி சங்கரன்கோவில் அம்மா நகரில் உள்ள ஒரு வீட்டில் இருந்த நகைகளையும் அங்கிருந்த ரூ.75,000/-ம் பணத்தையும் தானும் எதிரிகள் செல்வகுமார், சுரேஷ், மூர்த்தி என்ற மாரிச்சாமி, கார்த்திகேயன் ஆகியோர் சேர்ந்து திருடியதாகவும் அதை தன்னுடைய தோட்டத்திற்கு கொண்டு வந்து மறைத்து வைத்துள்ளதாகவும் தெரிவித்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி கொடுங்குசாமி மறைத்து வைத்திருந்த 12 தங்க நகைகளை எடுத்து ஆஜர் செய்தார். அதை அத்தாட்சி பிறப்பித்து ஆய்வாளர் கைப்பற்றினார். **அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 12 நகைகளை கைப்பற்றிய அத்தாட்சி அ.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கொடுங்குசாமி எடுத்து ஆஜர் செய்த ரூ.4,75,000/-ம் பணத்தை அத்தாட்சி பிறப்பித்து ஆய்வாளர் கைப்பற்றினார். பணத்தை கைப்பற்றிய அத்தாட்சி அ.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் கொடுங்குசாமி குற்றம் செய்வதற்கு பயன்படுத்திய கருவிகளை எடுத்து ஆஜர் செய்தார். அந்த சொத்துக்களையும் ஆய்வாளர் அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றினார். அந்த கருவிகளை கைப்பற்றிய அத்தாட்சி அ.சா.ஆ.14 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அதே சாட்சிகளின் முன்னிலையில் எதிரி செல்வகுமாரை ஆய்வாளர் விசாரித்த போது 13.00 மணிக்கு அவரும் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் சம்பவத்திற்கு TN79D5983 என்ற பதிவெண் கொண்ட சாம்பல் நிற காரை பயன்படுத்தியதாக கூறினார். அந்த காரை அத்தாட்சி பிறப்பித்து ஆய்வாளர் கைப்பற்றினார். **அந்த அத்தாட்சி அ.சா.ஆ.15 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அ.சா.ஆ.12 முதல் அ.சா.ஆ. 15 வரை உள்ள அத்தாட்சிகளில் கைப்பற்றப்படட சொத்துக்களை படிவம் 91 (4 எண்ணிக்கைகள்) மூலம் நீதிமன்றத்திற்கு ஆய்வாளர் அனுப்பி வைத்தார். கைப்பற்றப்பட்ட கைகளை**

**நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்த படிவம் 91 அ.சா.ஆ.16 ஆகவும், கைப்பற்றபட்ட பணத்தை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்த படிவம் 91 அ.சா.ஆ.17 ஆகவும், குற்றம் செய்வதற்கு பயன்படுத்த கருவிகளை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்த படிவம் 91 அ.சா.ஆ.18 ஆகவும், கைப்பற்றபட்ட காரை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்த படிவம் 91 அ.சா.ஆ.19 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி P.R.No.330/2018 ல் வைப்பீடு செய்யப்பட்டிருந்த TN79D5983 என்ற பதிவெண் கொண்ட சாம்பல் நிற காரை எதிரி செல்வகுமார் மற்றும் அவரது மனைவி கார்த்திகாவிடம் ஒப்புதல் பெற்று பைனான்ஸ் மேலாளர் பாண்டிமுனி, த/பெ. முப்பிடாதியிடம் திரும்ப ஒப்படைத்ததற்கான பிணைபத்திரம் அ.சா.ஆ.20 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 14.00 மணிக்கு எதிரி சுரேஷ் அதே சாட்சிகளின் முன்னிலையில் தாமாக முன் வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தான் திருடிய 3 பவுன் தங்க செயினை தெற்கு பனவடலியில் உள்ள ஒரு வீட்டில் மறைத்து வைத்திருப்பதாகவும், தன்னை அழைத்து சென்றால் அதை எடுத்து ஆஜர் செய்வதாகவும் கூறினார். அந்த நகை வேறு காவல்நிலைய வழக்கில் சம்பந்தப்பட்டதால் அதை கைப்பற்றி அந்த நீதிமன்றத்திற்கு ஆய்வாளர் அனுப்பி வைத்தார். 15.00 மணிக்கு எதிரி மூர்த்தி என்ற மாரிச்சாமிடியும் தாமாக முன் வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தான் இடைகால் ஊரில் திருடிய நகைகளையும் காரையும் பற்றி கூறினார். பின்பு அந்த நகைகளையும், காரையும் அடையாளம்காட்டி ஆஜர் செய்தார். அந்த நகைகளும் காரும் வேறு காவல்நிலைய வழக்கில் சம்பந்தப்பட்டது என்பதால் அதை அந்த வழக்கு நிலுவையில் இருக்கும் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தார். பின்னர் 16.00 மணிக்குஎதிரி கார்த்திகேயன் தாமாக முன் வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் சங்கரன்கோவில் மதுபான கடையில் மது பாட்டில்கள் தீருடி விற்றத்தில் கிடைத்த பணம் ரூ.7,000/ பெற்றதாக கூறினார். அந்த பணத்தை அடையாளம் காண்பித்து அவர் ஆஜர் செய்தார். அந்த பணம் சங்கரன்கோவில் நகர காவல்நிலைய வழக்கில் சம்பந்தப்பட்டதால் ஆய்வாளர் அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றி அந்த சொத்தை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தார். பின்னர் சாட்சிகள் மதன்சிபாகர் மற்றும் சங்கரநாராயணனை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். பின்னர் விசாரணை அதிகாரி ஜோசப் செட்சன் மருத்து

விடுப்பில் சென்றதால் வழக்கு கோப்பை நான் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு முந்தை விசாரணை அதிகாரி விசாரித்த சாட்சிகளை நான் மீண்டும் விசாரித்தேன். அந்த சாட்சிகள் முந்தைய விசாரணை அதிகாரியிடம் கொடுத்த வாக்குமூலத்தை போல என்னிடமும் வாக்குமூலம் அளித்ததால் அவர்களது மறு வாக்குமூலத்தைநான் பதிவு செய்யவில்லை. 25.06.2018ம் தேதி வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரிகளுக்கு எதிராக குற்ற இறுதி அறிக்கை தாக்கல்செய்தேன்.

**2ம் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

வழக்கு சம்பவமானது 17.04.2018ம் தேதி 18.30 மணிக்கு நடைபெற்றதாக வழக்கு ஆவணங்களில் துலங்குமா என்றால் துலங்கும். வழக்கு சம்பவத்தை பற்றி காவல்நிலையைத்திற்கு தகவலானது 18.04.2018ம் தேதி அதிகாலை 1.30 மணிக்கு கிடைக்கப்பெற்றதாக துலங்குமா என்றால் துலங்கும். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் வீட்டிற்கும் சங்கரன்கோவில் தாலுகா காவல்நிலையத்திற்கு எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 2 கி.மீ தூரம் இருக்கும். வழக்கு ஆவணங்களில் 17.04.2018ம் தேதி இரவு 7.00 மணிக்கு வழக்கு சம்பவம் தொடர்பாக புகார் கொடுக்கப்பட்டதாக துலங்காது என்றால் சரிதான். பார்வைமகஜரின் சம்பவ இடத்தில் வழக்கின் தேவையான தடையம் எதுவும் பெறப்படவில்லை என்று குறிப்பிட்டு கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். பார்வை மகஜரில் சம்பவ இடத்திலிருந்து விரல் ரேகை மட்டும் பதிவு செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளத என்றால் சரிதான். இவ்வழக்கில் மேற்கண்ட விரல்ரேகை பதிவு செய்யப்பட்டதை காண்பிக்கும் ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல்செய்யவில்லை என்றாலும் மேற்கண்ட விரல்ரேகை தொடர்பாக அதற்கான அதிகாரி யவரையும் விசாரித்ததாக வழக்கு ஆவணங்களில் துலங்காது என்றாலும் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு அருகாமையில் மூப்பிடாதி வீடு, ராம்குமார் வீடு, மாரிமுத்து வீடு உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் சரிதான். மேற்கண்ட வீட்டில் வசிக்கும் நபர்கள் இவ்வழக்கில் சாட்சிகளாக விசாரிக்கப்பட்டுள்ளார்களா என்றால் இல்லை. புகார் மனுவில் அந்த மனுவின் பொருளாக புகார்தாரர் வீட்டில் பணம் திருடு போனதன் சம்பந்தமாக என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் பணம் மற்றும் திருடு போனது சம்பந்தமாக என்று குறிப்பிடப்பட்டுள்ளது. நகை திருடு போனதாக அதில்

குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் புகார் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ள பொருளில் அவ்வாறு கூறப்படவில்லை. அ.சா.1 பாலமுருகன் தனது புகார் மனுவிலும் போலீசார் விசாரணையிலும் 2வது எதிரி செல்வகுமாரை சம்பவம் நடைபெறுவற்கு முன்பு பார்த்ததாகவும், எதற்காக 2வது எதிரி வந்துள்ளார் என்று கேட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. அ.சா.2 டேனியல் போலீசார் விசாரணையின் போது சம்பவம் பற்றி கேள்விப்பட்டு அ.சா.1 வீட்டிற்கு தான் வந்ததாகவும், அப்போது அங்கு போலீசார் இருந்ததாகவும் கூறியுள்ளாரா என்றால் இல்லை. அ.சா.1 பாலமுருகன் என்பவர் போலீசார் விசாரணையின் போது தனது வீட்டிலிருந்து காணாமல் போன 5,50,000/-ம் ரூபாய் சீட்டு பணத்தில் முதல் சீட்டில் தனது அக்கா பிளாரன்ஸ் மேரிக்கு சொந்தமான ரூ.1,20,000/-மும், தனது அண்ணன் அன்புமாறனுக்கு சொந்தமான ரூ.50,000/-மும் தனது மனைவியின் சொந்த சேமிப்பான 2,10,000/-மும் அடங்கும் என்று கூறியுள்ளாரா என்றால் கூறியுள்ளார். மேற்கண்ட பிளாரன்ஸ் மேரி, அன்புமாறன் மற்றும் அ.சா.1ன் மனைவி ஆகியோர் இவ்வழக்கின் சாட்சிகளாக விசாரிக்கப்பட்டுள்ளார்களா என்றால் இல்லை. மாதிரி வரைபடத்தில் சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும் வீட்டின் வெளிப்புற கேட், பெட்ரூம் கதவு ஆகியவை உடைக்கப்பட்டதாக குறிப்பிட்டு காண்பிக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. மேற்படி கேட் மற்றும் கதவு உடைக்கப்பட்டதை காண்பிக்கும் புகைப்படம் எதுவும் வழக்கு ஆவணங்களில் உள்ளதா என்றால் இல்லை. புகார் மனுவில் திருடுபோனதாக சொல்லப்படும் 49 ½ பவுன் நகை மற்றும் 5,50,000/-ம் ரூபாய் பணம் ஆகியவை புகார்தாரருக்கு சொந்தமானதா என்பதை காண்பிக்கும் ஆவணம் எதையும் அவரிடமிருந்து பெறப்பட்டதா என்றால் இல்லை. எதிரிகளிடமிருந்து பெறப்பட்டதாக சொல்லப்படும் ஒப்புதல்வாக்குமூலத்தை தவிர்த்து வேறு எந்த ஆவணங்களிலும், எதிரிகள் வழக்கின் திருட்டு சம்பவத்தில் ஈடுபட்டதாக துலங்காது என்றால் சரியல்ல. எதிரிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துக்கள் பொறுத்து அத்தாட்சி பிறப்பிக்கப்பட்டுள்ளது. திருட்டு சம்பவத்தில் ஈடுபட்ட நபர்களின் கைரேகை பெறப்பட்டு ஆய்வு செய்யப்பட்டதா என்பதை காண்பிக்கும் வகையில் கைரேகை நிபுணர் யாரும் விசாரிக்கப்படவில்லை என்றாலும், அந்த நிபுணர்களிடமிருந்து ஆவணங்கள் எதுவும் பெறப்படவில்லை என்றாலும் சரிதான். சம்பவ இடத்திலிருந்து கைரேகை

எடுக்கப்பட்டது என்றாலும், அந்த கைரேகை ஆய்வு செய்யப்பட்டதில் முடிவானது வழக்கிற்கு எதிராக இருந்ததால் அந்த ஆய்வு செய்த கைரேகை நிபுணர் விசாரிக்கப்படவில்லை என்றாலும், அவரிடமிருந்து ஆவணம் எதுவும் பெறப்படவில்லை என்றாலும் சரியல்ல. எதிரிகளிடமிருந்து பெறப்பட்டதாக சொல்லப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் வழக்கு சொத்தை கைப்பற்றுவதற்காக தயாரிக்கப்பட்டதாக சொல்லப்படும் அத்தாட்சிகள் ஆகியவை காவல்நிலையத்தில் வைத்து உற்பத்தி செய்யபட்ட ஆவணம் என்றால் சரியல்ல. நான் முதல்விசாரணையில் கூறியவாறு கூறிய வகையில் ஒப்புதல் வாக்குமு்லம் மற்றும அத்தாட்சி சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்யப்படவில்லை என்றாலும், அதனால் தான் அந்த ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் உள்ள சாட்சிகள் இவ்வழக்கில் பிறழ் சாடசிகளாக விசாரிக்கப்பட்டுள்ளனர் என்றாலும் சரியல்ல. நான் முதல் விசாரணையில் கூறிய நாள் நேரத்தில் புகார் மனு பெறப்படவில்லை என்றாலும், அதனடிப்படையில் வழக்கு பதிவு செய்யப்படவில்லை என்றாலும், சம்பவ இடம் சென்று பார்வை மகஜர் மற்றும் மாதிரிவரைபடம் தயார் செய்யப்படவில்லை என்றாலும், அரசுதரப்பு சாட்சிகள் விசாரணை செய்யப்படவில்லை என்றாலும், எதிரிகள் நான் கூறிய நாள் நேரத்தில் கைது செய்யப்படவில்லை என்றாலும், எதிரிகளிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் பெறப்படவில்லை என்றாலும், எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும், வழக்கு சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்பட்டவில்லை என்றாலும் சரியல்ல.

**1, 3 மற்றும் 4 எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜராகி 2ம் தரப்பில் எடுக்கப்பட்ட குறுக்கு விசாரணையை அடாப்ட் செய்து கொள்வதாக தெரிவித்தார்.**

**மறுவிசாரணை இல்லை.**